
# வரலாற்றில் இமையாணன்









**இமையாணனில் பழைமையான செப்பு நாணயங்கள் கண்டுபிடிப்பு**

உடுப்பிட்டி, மே 28

வடமராட்சி, இமையாணனில் பண்டைக்காலத்து செப்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இமையாணனில் நிர்மாண வேலை ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. சிலர் நிலத்தைத் ஆழமாகத் தோண்டினர். என்ன ஆச்சரியம்! ஆழத்தில் ஒரு மண்கலசம்.

அந்தக் கலசத்தை பவுத்திரமாக அவர்கள் வெளியே எடுத்தனர். அதனுள் செப்பு நாணயங்கள். அதுவும் ஒன்று, இரண்டா? முன்னூறு நாணயங்கள்.

இந்த நாணயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக அரசாட்சி செய்த சங்கிலிய மன்னனின் காலத்தில் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என ஓர் ஊகம் தெரிவிக்கப்பட்டது.

இமையாணன் என்ற இடம் சங்கிலிய மன்னனால் அவனது பிரதம படைத் தளபதியான இமையாணன் என்பவனுக்கு சன்மானமாக வழங்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது.

(ஓ–160)

கே.எம்.செல்வதாஸ்

# வரலாற்றில்
# இமையாணன்

கே.எம். செல்வதாஸ்

**வரலாற்றில் இமையாணன்**
கே.எம்.செல்வதாஸ்
முதற்பதிப்பு: 2023
© மயூரி செல்வதாஸ்
அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்
வெளியீடு: இமையாணன் கல்விக்கழகம், இமையாணன், உடுப்பிட்டி
பக்கம்: 26
விலை: 100.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Varalatril Imayanan**
K.M. Selvathas
First Edition: 2023
©Mayoori Selvathas
Cover Designed by K.Bharaneethara
Published by Imayanan Education Society
Pages: 26
Price: 100.00
Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-54651-3-7

**இமையாணன் கல்விக்கழகம் – வெளியீடு : 02**

# என்னுரை

இது எம் மண்ணின் வரலாறு. ஒவ்வொரு மண்ணிற்கும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றை இளைய சந்ததிக்கு எடுத்துச் செல்கின்றவேளை மண் வலிமை காண்கின்றது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் நுழைவாயி லாக யாழ்ப்பாண இராச்சியம் அமையப் பெற்றுள்ளது. அத்தகைய இராச்சியத்தின் இறுதி மன்னனாக விளங்கிய சங்கிலியனின் படைத்தளபதிகளாக வல்லியமாதாக்கன், இமையாணமாதாக்கன், செண்பகமாதாக்கன், வெற்றி மாதாக்கன் ஆகியோர் இருந்துள்ளனர் என்பதனை வரலாற்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இவர்களுள் இமையாண மாதாக்கனோடு தொடர்புபட்டதாகவே எம் மண் காணப்படுகின்றது. இத்தகு வரலாற்றுப் பாரம் பரியத்தை ஆவணப்படுத்தும் நோக்கோடு இந்நூல் வெளி வருகின்றது.

இது எங்கள் மண்.
மண்ணால் நாம் உயர்வோம்.
எம்மால் மண் உயரட்டும்.

- கே.எம். செல்வதாஸ்

# எமதூரின் வரலாற்றைப் பதிவு செய்யும் முதல் முயற்சி

வரலாறுகள் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதுடன் எதிர்கால சந்ததியினர் விளங்கி காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்க வேண்டியவையாகும். இவ்வடிப்படையில் வரலாற்றில் இமையாணன் எனும் இந் நூல் நாம் பிறந்த மண்ணின் வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்துகின்ற முதல் முயற்சியாக காணப்படுகின்றது. இதனை செய்ய விளைகின்ற கே.எம்.செல்வதாஸ் அவர்களை பாராட்டுவதுடன் இவ் எண்ணம் தொடரவும் இன்னமும் ஆழமான முறையில் ஆய்வுகளுடன் எம்மண்ணின் வரலாறு பதியப்படவும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளது போல் யாழ்ப்பாண இராசதானியுடன் தொடர்புபட்ட ஆதாரங்கள் மட்டுமன்றி இம்மண்ணில் உதித்த அறிஞர்கள் ஆன்றோர்கள் தொடர்பிலும் எதிர்கால சந்ததியினருக்கு நாம் எடுத்துக்கூற வேண்டிய பொறுப்பிலுள்ளவர்களாய் இருக்கின்றோம். எனவே இச்சிறு முயற்சி மேலும் வளர்ந்து பல நல்ல விடயங்களை உலகிற்கு எடுத்துக்கூறும் விருட்சமாக ஓங்கிட இந்நேரத்தில் வாழ்த்துகின்றேன்.

நன்றி.


திரு வி.மணிமாறன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தொல்லியல் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

06.04.2023.

# பிறந்த கிராமத்து வரலாற்றுப் பெருமையை அடையாளப்படுத்தும் அரிய முயற்சி

வடஇலங்கையில் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு கொண்ட பிராந்தியங்களில் வடமராட்சிக்கு தனிச் சிறப்புண்டு. 1917 இல் கந்தரோடையில் வரலாற்றுப் பெறுமதி உடைய தொல்பொருட் சின்னங்களைக் கண்டுபிடித்த போல் பீரிஸ் கந்தரோடையை அநுராதபுரத்திற்கு அடுத்து தோன்றிய புராதன தலைநகர் என அடையாளப்படுத்தி இவ்வரலாற்றுப் பழமை வடமராட்சிக்கும் உண்டு எனக் குறிப்பிட்டார். வடஇலங்கையின் தமிழ் அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் மற்றும் பிற்கால வரலாற்று ஆய்வாளர்கள் தலைநகர் கதிரைமலையைத் (கந்தரோடை) தொடர்ந்து தோன்றிய சிங்கை நகர் வடமராட்சியில் இருந்திருக்கவேண்டும் என்பதற்கு அங்கு காணப்பட்ட பண்டையகாலத் தொல்பொருட் சின்னங்களை ஆதாரங்களாகக் காட்டினர். வடமராட்சியின் தொன்மையை வெளிப்படுத்த தொல்லியல் ஆதாரங்களுடன் பல வாய்மொழி வரலாற்றுக்கதைகளும் உள்ளன. இவ்விரண்டையும் தொடர்புபடுத்தி பேராசிரியர் கிருஸ்ணராசா அண்மையில் நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். சமகால வரலாற்று ஆய்வுகளில் பரந்த பிரதேசத்தை ஆய்வு செய்வதைக் காட்டிலும் வட்டாரம், ஊர், கிராமம் என்ற அடிப்படையில் செய்யப்படும் ஆழமான ஆய்வுகளால் இதுவரை அறியப்படாத பல உண்மைகள் வெளிவரும் என்ற கருத்துக் காணப்படுகின்றது. அதை நினைவு படுத்தும் அரிய முயற்சியாகவே ஆசிரியர் கே.எம். செல்வதாஸின் இந்நூலைப் பார்க்கின்றேன்.

இந்நூலாசிரியர் யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன் சங்கிலியனின் படைத்தளபதிகளில் ஒருவனான இமையாண மாதாக்கன் பெயரை நினைவு படுத்தி தோன்றியதே இமையாணன் என்ற பெயர்கொண்ட கிராமம் என்ற முடிவுக்கு வருகின்றார். இதற்கு ஆதாரமாக வாய்மொழி வரலாற்றுக் கதைகள், முன்னைய அறிஞர்களின் கருத்துக்கள், இமையாணனை மையப்படுத்தி எழுந்த நாடகங்கள், தனது தொல்லியற் கண்டுபிடிப்புகள் என்பவற்றைக் குறிப்பிடு கின்றார். மேலும் இக்கிராமத்திற்கு தொன்மையான வரலாறு இருந்ததற்கு அக்கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள், பண்டையகால சிறு நகரங்கள் இருந்த இடத்தை அடையாளப்படுத்தும் ஆவுரஞ்சிக்கல், சிறு கேணி என்பவற்றின் அழிபாடுகளையும் பயன்படுத்தியிருப்பது இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகும்.

இவ்வரலாற்றுப் பின்புலத்தில் இருந்து எழுந்ததே பிற்கால இமையாணன் கிராமத்து கல்வி, கலை, சமயம், பண்பாடு என்ற நூலாசிரியரின் விவாதமும் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

இச்சிறு நூலை வாசிக்கும் போது இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த அமரர் பேராசிரியர் துரைராஜா அவர்கள் தான் பிறந்து வளர்ந்த இமையாணன் கிராமம் பற்றி பலரும் பெருமையாகப் பேசுகின்றனர். அப்படியான கிராமத்து வரலாறு பற்றி ஏன் ஆராயக்கூடாதெனக் கேள்வி எழுப்பியிருந்தார். அக்கேள்விக்கு விடைகூற முற்பட்டிருக்கும் சிறு முயற்சியாகவே இந்நூலைப் பார்க்கின்றேன். ஒரு ஆய்வாளனுக்கு இருக்கவேண்டிய அணுகுமுறையும், மொழி நடையும் இந்நூலின் சிறப்பம்சமாகும். இந்நூலாசிரியர் முன்னுரையில் கூறியிருப்பது போல் ஒரு மண்ணின் வரலாற்றை இளைய சந்ததிக்கு எடுத்துச் சொல்வதன் மூலம் அந்த மண் வலிமைபெறுகின்றதென்ற கூற்றுக்கு இந்நூல் ஒரு சான்றாகும். அவரது கடின உழைப்பும், மண்மீது கொண்ட ஆழமான பற்றும் தொடர் ஆய்வுகளால் மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மூத்த ஓய்வுநிலைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வரலாற்றில் இமையாணன்

*வடமராட்சி மண்ணின் நுழைவாயிலாய் அமையப் பெற்றிருக்கும் இமையாணன், நீண்ட பண்பாட்டுப் பாரம்பரியங் களைத் தன்னகத்தே கொண்ட மண்ணாக மிளிர்கின்றது. இமையாணன் என்னும் பெயர் காலத்துக்குக் காலம் பல்வேறு வரலாற்றாய்வாளர்களினால் உச்சரிக்கப்பட்டிருக்கின்றமையினை நூல்களின் வாயிலான அறிந்து கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாண அரசின் இறுதி மன்னனாகிய சங்கிலிய மன்னனுக்கும் இவ்வூருக்குமி டையே காணப்பட்ட ஒரு வித தொடர்பும் அதன் வரலாற்றுப் பெருமைக்குக் காரணமாயிற்று. சங்கிலிய மன்னனோடு வடமராட்சி மண் தொடர்புபட்டிருந்தமையினை அக்காலத்தில் இடம் பெற்ற வடமராட்சிக் கலகம் உறுதி செய்கின்றது.*

"அக்காலத்தில் வடமராட்சியிலே சனங்களுக்குள்ளே ஓர் ஊர்க் கலகமுண்டாயிற்று. அதையறிந்த சங்கிலியன் அக்கலகத்தை அடக்க எண்ணி அரசருக்குரிய வரிசை வாத்தியங்களுடனே சென்று கலகத்தை அடக்கித் திரும்பினான்..."

*என்று எஸ்.ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகின்றது. இத்தகைய வரலாற்றுப் பெருமை மிக்க சங்கிலிய மன்னனின் பிரதம படைத்தளபதியாக விளங்கியவனே 'இமையாணன்' என்னும் வீரன் இவன் இமையாண தேவன், இமையாண மாதாக்கன், இமையாளன் என்ற பெயரினைத் தாங்கியவனாகவும் வரலாற்றில் உலா வருகின்றான். இதனை பல வரலாற்று ஆய்வாளர்களும் உறுதி செய்துள்ளனர்.*

*கதிர் தணிகாசலம் என்னும் வரலாற்றாய்வாளர் 'தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்' என்ற தனது நூலில்,*

இமையாணன்

இமையாள் + நன்

↓ ↓

இமையவள் கொழுநன் (கணவன்)

↓ ↓

பார்வதி சிவன்

↓

பார்வதியின் கணவன் சிவன்

என்னும் அர்த்தம் தாங்கிய

↓

இமையாண தேவன்

*என்று கூறியதோடு மட்டுமல்லாமல் இமையாணதேவன் சங்கிலிய மன்னனின் தளபதிகளில் ஒருவன் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு இமையாணனிலிருந்து ஒரு ஓடை (அகழி - வாய்க்கால்) தொடங்கி சமரபாகு ஊடாக வல்வெட்டியை அடைந்து வல்வெட்டித்துறை தீருவில்ப் பக்கமாகச் சென்று அம்மன் கோவில் முன்பாக இறங்கி வல்வைக் கடலோடு தொடுக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். (பக்கம் 212 - 213)*

*கலாநிதி இ.பாலசுந்தரம் என்னும் வரலாற்றாய்வாளர் "இலங்கை இடப்பெயர்வு ஆய்வு 2" என்ற தனது நூலில்*

"இமையாணன் எனப் பெயருடைய இரு
இடங்கள் உடுப்பிட்டியிலும் கரவெட்டியிலும்
அமைந்துள்ளன. ஆட்சியதிகாரி அல்லது
படைத்தளபதி எனப் பெயருடைய
ஒருவரது பெயரால் இவ்விடப் பெயர்
தோற்றம் பெற்றிருக்கிறது"

*என்று கூறியுள்ளார். (பக்கம் 122 123)*

*மாதகல் மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையிலே,*

"சிங்கையாரிய மகராசன், வல்லிய மாதக்கன் என்னும் பராக்கிரம சூரனை மேற் பற்றுக்கும் செண்பகமாதாக்கன் என்னும் சூரிய வீரனைக்

கீழ்ப்பற்றுக்கும், இமையாண மாதாக்கன் என்னும் உத்தண்ட வீரனை வடபற்றுக்கும் வெற்றிமாதாக்கன் என்னும் விசய பராக்கிரமனைத் தென்பற்றுக்கும் அதிகாரிகளாக நிறுத்தி உத்தண்ட வீரசிகாமணியாகிய வீரசிங்கன் என்பவனைச் சேனாதிபதியாக்கினான்" *(பக்கம் - 30)*

*எஸ். ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரத்திலே*

"வல்லிய மாதாக்கன் என்னும் பராக்கிரம வீரனை மேலைப்பற்றுக்கும் சண்பகமாதாக்கன் என்னும் வீரசூரனைக் கீழைப்பற்றுக்கும், உத்தண்ட கெம்பீரவீரனாகிய இமையாணன் என்னும் மாதாக்கனை வடபற்றுக்கும் வெற்றி மாதாக்கன் என்னும் விசயபராக்கிரமனைத் தென்பற்றுக்கும் அதிகாரிகளாக நிறுத்தினான்..."*(பக்கம் - 23)*

*க. வேலுப்பிள்ளை என்னும் வரலாற்றாய்வாளர் எழுதிய யாழ்ப்பாண வைபவ கௌமுதியிலே*

"சிங்கையாரியன் இந்தியாவிலிருந்து வந்த பிரபுக்களை அவரவர் அடிமைகளுடனும் குடிமைகளுடனும் குடியிருத்திய பின் நான்கு திசைகளுக்கும் நான்கு சேனைகளைக் காவலாக நிறுத்தி மேற்றிசைச் சேனைக்கு வல்லியமாதாக்கனென்னும் பராக்கிரம வீரனையும், கீழ்த்திசைச் சேனைக்கு சண்பகமாதாக்கனென்னும் வீரசூரனையும், வடதிசைச் சேனைக்கு உத்தண்ட கெம்பீர வீரனாகிய இமையாணனெனும் மாதாக்கனையும், தென்திசைச் சேனைக்கு வெற்றி மாதாக்கன் என்னும் விசய பராக்கிரமனையும் சேனாதிபதிகளாக்கி வீரசிகாமணியாகிய வீரசிங்கனைச் சர்வசேனைக்கும் நாயகமாக்கினான்." *(பக்கம் 14 - 15)*

*யாழ்ப்பாண அரசின் பெருமை கூறும் கைலாயமாலை எனும் நூலில் முத்துராசக் கவிராசர்*

"... நல்விளைவு தாவுங் கழனிகளுஞ் சாற்றம் பலவளமு
மேற வெளி நாட்டில் விளங்க வைத்துப்-பூவில்
தலையாறி சேவகரிற் றக்கவர்க டம்மை
நிலையாக நாட்ட நினைத்துச் - சிலைதரித்த
வல்லியமா தாக்கனென்னு மாசூர வீரியனைச்
சொல்லியமேற் பற்றுத் துலங்க வைத்து -நல்ல
இமையாண மாதாக்க னென்னுமிக லோனை

அமைவாம் வடபற்றி லாக்கி -இமயமறி
செண்பகமா தாக்கனெனுஞ் சீர்விறலோன் றன்னையிரு
கண்போலக் கீழ்ப்பற்றைக் காக்க வைத்து -ஒண்பயிலும்
லெந்நிமா தாக்கனெனும் லெய்யதிற லோனை மிக
உற்றிடுதென் பற்றி லுகந்து வைத்துச்..."

*(கைலாய மாலை பக்கம்15)*

*போன்ற வரலாற்றுக் குறிப்புகள் இமையாண மாதாக்கன் வடபற்றை நிர்வகித்த செய்தியை உறுதி செய்கின்றன.*

*மேலும் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவின் "வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கியவளமும்" என்னும் நூலில்*

"வடமராட்சியில் புலவர்களும் கல்வி வளமும் காணப்பட்ட பகுதிகளில் புலோலி விதந்துரைக்கக் கூடியது வடமராட்சியில் வரலாற்றோடு தொடர்புடைய தாகக் கூறப்படும் சிங்கைநகர், புட்டளை, இமையாணன், சமரபாகு, ஆனை விழுந்தான், ஆனைப்பந்தி போன்ற இடப் பெயர்கள் இன்றும் காணப்படு கின்றன" *(பக்கம் - 03)*

*என்ற குறிப்பு நோக்கத்தக்கது.*

*இத்தகைய வரலாற்றுச் செய்திகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் முகமாக சங்கிலியன் வரலாற்றோடு தொடர்புடைய நாடகங்கள் பலவும் அமையப் பெற்றிருக்கின்றமையினைக் காணமுடிகின்றது.*

**சங்கிலி**

**பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் தொகுப்பிலிருந்து**

**சங்கிலி நாடகத்தில் வரும் ஆடவர் அரிவையர்**

| | |
|---|---|
| *பரராசசேகரன்* | *- யாழ்ப்பாணத்தரசன்* |
| *சங்கிலி* | *- பரராசசேகரன் மகன் யாழ்ப்பாணத்தரசன்* |
| *தனிநாயகமுதலி* | *- முதன் மந்திரி* |
| *அரசகேசரி* | *- அவைக்களத்துப்புலவர்* |
| *அப்பாமுதலி* | *- மந்திரி, வடிவழகியின் தகப்பன்* |
| *முத்துலிங்க முதலி* | *- மந்திரி* |
| *அடியார்க்கு நல்லான்* | *- மந்திரி* |

| | |
|---|---|
| *வீரமாப்பாணன்* | *- சங்கிலியின் நண்பனும் மெய்க்காப்பாளனும்* |
| இமையாணன் | *- தளபதி* |
| *பரநிருப சிங்கன்* | *- சங்கிலியின் அண்ணன்* |
| *வடிவழகி* | *- அப்பாமுதலியின் மகள், சங்கிலியின் காதலி* |
| *இராசமாதேவி* | *- சங்கிலியின் மனைவி* |
| *செங்கமலம்* | *- வடிவழகியின் தோழி* |
| *கனகம்* | *- வடிவழகியின் தாய்* |

**சங்கிலி**

**இடம்**

*நல்லூர் யாழ்ப்பாணத்து அரசன் அவைக்களம் (அரசுக் கட்டிலில் யாழ்ப்பாணத்தரசன் பரராசசேகரன் வீற்றிருக்கின்றான். அருகில் சங்கிலி ஓர் இருக்கையில் அமர்ந்திருக்கின்றான். தனிநாயகமுதலி, அடியார்க்கு நல்லான்* **இமையாணன், வீரமாப்பாணன் ஆகியோர் அவனைச் சூழ்ந்திருக்கின்றனர்)**

*சங்கிலி : (தளபதி இமையாணனைப் பார்த்து)*
*தளபதி இமையாணனாரே இதைச் சிறிது கவனியுங்கள்*

*இமையாணன் : (எழுந்து நின்று) ஓம் அரசே, கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடிப்பதற்கு வேண்டிய ஒழுங்கு களைச் செய்து விபரங்களையெல்லாம் நாளைக்கு உங்களுக்குத் தெரிவிப்பேன். நாளை இரவே மறவன் புலவிற்குப் படைவீரர் சிலரை அனுப்பலாம்.*

*சங்கிலி : யாழ்ப்பாண அரசு இப்பொழுது தங்களையே எதிர்ப்பார்க்கின்றது. மன்னாருக்குப் படையெடுத் துச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை விரைவில் முடியுங்கள் எப்பொழு நீங்கள் ஆயத்தமாவீர்கள்.*

*இமையாணன்: நாளை காலையிலேயே படையுடன் புறப்பட்டு விடலாம் அரசே!*

*(சங்கிலி பக்கம் 1, 13, 14, 51, 52)*

## மண்வாசனையில் மூன்று நாடகங்கள்

செல்லையா மெற்றாஸ்மயிலின் தொகுப்பிலிருந்து

**நாடக மாந்தர்கள்**

| | |
|---|---|
| *பரராசசேகரன்* | *- யாழ்ப்பாணத்தரசன்* |
| *பரநிருபசிங்கன்* | *- சங்கிலியன் அண்ணன்* |
| *வள்ளியம்மை* | *- பரராசசேகரன் மனைவி* |
| *சங்கிலியன்* | *- பரராசசேகரன் மகன், யாழ்ப்பாணத்தரசன்* |
| *பரவை* | *- சங்கிலியன் தங்கை* |
| *அப்பாமுதலி* | *- மந்திரி* |
| *அரசகேசரி* | *- அவைக்களத்துப்புலவர்* |
| *இமையாணன்* | *- தளபதி* |
| *காக்கை வன்னியன்* | *- ஊர்காவற்றுறைத் தலைவன்* |
| *அமுதவல்லி* | *- சங்கிலியன் காதலி* |
| *இராசமாதேவி* | *- சங்கிலியன் மனைவி* |
| *வீரமாப்பாணன்* | *- சங்கிலியன் மெய்க்காப்பாளன்* |
| *மணியகாரன்* | *- மணியகாரன்* |
| *வடிவழகி* | *- அமுதவல்லியின் தோழி* |

**இடம்**

**நல்லூர் அரசன் அவைக்களம்**

*(பாத்திரங்கள் : சங்கிலி, அப்பாமுதலி, அரசகேசரி, இமையாணன், தனிநாயகமுதலி, பரநிருபசிங்கன், மணியகாரன், மழுவராயர், ஒற்றன்)*

*சங்கிலி : தளபதி, இமையாணனே?*

*இமையாணன் : அரசே!*

*சங்கிலியன் : இந்தச் சங்கிலியன் ஆட்சியில் அடம்பிடித்த கூட்டமா? அவர்களுக்கு உடனே தண்டனை வழங்குவீர்*

*இமையாணன் : நாளை இரவே படைவீரனை அனுப்பி விபரங்களை சமர்ப்பிக்கின்றேன் (பக்கம் - 44, 45, 57)*

**சங்கிலியம்**

**காரை செ.சுந்தரம்பிள்ளையின் தொகுப்பிலிருந்து**

*சங்கிலியன் இச்செய்தி யறிந்தான் கோபம்*
*தலைக் கொள்ள இமையாணர் தனையழைத்து*
*எங்குமிசை பெற்றதள பதியே! ஈழத்*
*தீடில்லா மாமல்ல! எமது நாட்டில்*
*எங்களனு மதியின்றி இறங்குகின்ற*
*எத்தர்களை இப்போதே ஓட்ட வேண்டும்*
*சங்கொலிக்கும் தாய் நாட்டின் மானம் காக்கத்*
*தக்கபடை யொன்றுடன் யாம் செல்வோமென்றான்*

*மன்னவனின் ஆணைதலை மேற்கொண் டங்கே*
*மாவீரர் சூழ்ந்த பெருஞ் சேனை யொன்றை*
*நன்றாக இமையாணர் அணிவகுத்தே*
*நல்லை நகர்க் காவலனுக் குணர்த்தி நிற்கத்*
*தன்னிகரில் மன்னவனும் கவசம் பூண்டு*
*தக்கபரி வாரங்கள் சூழ்ந்து செல்ல*
*அன்னைவீர காளியம்மன் கோயில் சேர்ந்தே*
*அன்புள்ளத் தோடுதுதி செய்யலுற்றான்.*
*(பக்கம் - 75, 76)*

**மாவீரன் சங்கிலியன் சரித்திரத் தொடர்...**

*"நல்லூர்க் கோட்டையிலே அரசனின் பிரதான மண்டபத்தில்சிம்மாசனத்தில் மன்னன் பராஜசேகரன் வீற்றிருந்தான். அவனுக்கு இரு மருங்கிலும் முதன் மந்திரி தனிநாயக முதலி, அவைக்களத்துப் புலவர் அரசகேசரி, மந்திரிகளான அப்பா முதலி, முத்துலிங்க முதலி அடியார்க்கு நல்லான் அத்துடன்* யாழ் கோட்டைத் தளபதி இமையாணன் *ஆகியோர் அமர்ந்திருந்தனர். சபையோ எந்தவித*

ஆரவாரமும் இன்றி சோகமயமாக சங்கிலியின் வருகைக்காக காத்திருந்தது. அப்பொழுது கோபம் கண்களில் கொப்பளிக்க ஆவேசமாக சங்கிலி அரச சபைக்குள் நுழைகின்றான். கூடவே வீரமாப்பணனும், மந்திரிகளே! பண்டாரம் கொல்லப்பட்டு விட்டானா? என் அண்ணனைக் கொன்றவர்களைப் பிடித்து விட்டீர்களா? நான்இல்லாத போது என்ன நடந்தது? விரிவாகச் சொல்லுங்கள்" என சபையே அதிரும்படி ஆவேசமாகக் கத்தினான்.

அவனை நோக்கிய முதன் மந்திரி தனிநாயக முதலி "சங்கிலி அவசரப்படாதே! நம் தளபதி இமையாணன் உடனடியாக கோட்டைக்குள் வைத்தே அப்பாதகனை கைது செய்து விட்டார்..."

(மாவீரன் சங்கிலியன்சரித்திரத்தொடர்
பாகம் - 4(அரச பாரம்)

"... நல்லூர் அரசசபையில் தன் அருகில் நின்ற தனது மெய்க் காவலனும் நண்பனுமாகிய வீரமாப்பாணனையும் தளபதி இமையாணனையும் நோக்கிய சங்கிலி, "நாம் உடனடியாக மன்னார் சென்றே ஆக வேண்டும்" எனக் கூறினான். "நானும் அவ்வாறு தான் நினைக்கின்றேன். உங்கள் உத்தரவு கிடைத்தால் நாம் இங்கிருந்து இப்பொழுதே புறப்படலாம்" என தளபதி இமையாணன் கூறினான்.

(மாவீரன் சங்கிலியன் சரித்திரத்தொடர் -பாகம்-5)

"பிரபு! நாங்கள் இப்போரில் வீரத்தை விட விவேகத்தையே பயன்படுத்துவது மிகச் சிறந்தது. படையளவில் எங்கள் படை பெரிதானாலும், அவர்கள் குண்டுகளை சமாளிக்க முடியாது. இதனால் புத்தியை மிகவும் கூர்மையாக்கி போரிட வேண்டும். அதற்கு ஏற்றால்போல் வீரர்களை தயார்ப்படுத்த வேண்டும்" என்றான் தளபதி இமையாணன்.

"தளபதியே! நீர் இருக்கும் போது எனக்கென்ன கவலை, நிச்சயம் இந்தப் போரில் வெற்றி பெறுவோம்" என்றான் சங்கிலி.

***

சட்டநாதர் கோவிலதும் வீரமாகாளி அம்மன் கோவிலதும் அருட் கடாட்சத்தை மனதில் நினைத்து அத் தெய்வங்கள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு தளபதி இமையாணனுடன் படை அணிவகுப்பை பார்க்கச் சங்கிலி சென்றான்.

“என்ன இமையாணா! நம்படை மிகுந்த திடத்துடன் இருக்கின்றதா?”

“ஆம் அரசே...! நான் வீரர்களைச் சந்திக்க வேண்டும். அவர்களை மனதளவில் திடப்படுத்த வேண்டும்” என்றான் சங்கிலி.

“அவ்வாறே செய்யலாம்” எனக் கூறி இமையாணன் சங்கிலியை வீரர்களின் பாசறைக்கு அழைத்துச் சென்றான்.

*(சரித்திரவீரன் சங்கிலி பாகம் 19, 20)*

*“...தன் படை வீரரில் சிறந்த நானூறு பேரைத் தெரிவு செய்து அவர்களை படையணி வகுப்பின் முன்னிறுத்தி; அவர்களை தானே முன்னின்று வழிநடத்திச் சென்றான் சங்கிலியன். எஞ்சியவர்களை தளபதி இமையாணன் வழிநடத்திச் சென்றான்...”*

*“போர்க்களத்தில் சங்கிலி காயப்படவே சங்கிலி இல்லாத படையினை வழிநடத்தும் பொறுப்பை, இமையாணன் முற்றாக எடுத்துக் கொண்டான்...”*

*(மாவீரன் சங்கிலி சரித்திரத்தொடர் பாகம் 22 - பதினோராம் நாள் போர்)*

*மேலும் சங்கிலிய மன்னனோடு தொடர்புடையவர்களாகக் கருதப்படும் சமரபாகுதேவன், மழவராயன், வீரவாகு, மணியகாரன், வீரமாப்பாணன் முதலியவர்களின் பெயர்களைத் தாங்கிய,*

*ஆனைவிழுந்தான்*

*பட்டணத்தார்வளவு*

*சமரபாகு*

*மாப்பணார் வளவு*

*மணியகாரன் தோட்டம்*

*மமழவரான்*

*இவை யாவுமே இமையாணன் வரலாற்றை உறுதி செய்வதற்கு சான்றாகின்றன.*

*இவ்வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துகளுக்கெல்லாம் வலுச்சேர்க்கும் விதமாக தற்போது இமையாணன் மத்திய*

*விளையாட்டுக்கழக மைதானம் அமைந்துள்ள நிலப்பரப்பினை (19.05.1989) அன்று சிரமதானம் செய்து அகழ்ந்த வேளையில் கிட்டத்தட்ட முந்நூறு நாணயங்கள் கொண்ட மண்கலசம் ஒன்று கிடைக்கப்பெற்றது.*

# கிடைக்கப்பெற்ற நாணயங்கள்





இந்த நாணயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக அரசாட்சி செய்த சங்கிலிய மன்னனின் காலத்தில் பயன்படுத்தப் பட்டவை என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

## 28.06.1989 ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி



உதயன்

விலை ரூ. 2/50

UTHAYAN - A LIVELY NATIO

(28 - 05 - 1989)

### இமையாணனில் பழைமையான செப்பு நாணயங்கள் கண்டுபிடிப்பு

உடுப்பிட்டி, இமையாணனில் பண்டைக்காலத்து செப்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடமராட்சி, மே 28

கடந்த வெள்ளிக்கிழமை இமையாணனில் நிர்மாண வேலை ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. சிலர் நிலத்தைத் ஆழமாகத் தோண்டினர். என்ன ஆச்சரியம்! ஆழத்தில் ஒரு மண்கலசம்.

அந்தக் கலசத்தை பவுத்திரமாக அவர்கள் வெளியே எடுத்தனர். அதனுள் செப்பு நாணயங்கள். அதுவும் ஒன்றா, இரண்டா? முன்னூறு நாணயங்கள்.

இந்த நாணயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக அரசாட்சி செய்த சங்கிலிய மன்னனின் காலத்தில் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என ஓர் ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமையாணன் என்ற இடம் சங்கிலிய மன்னனுடைய பிரதம படைத் தளபதியான இமையாணன் என்பவனுக்கு சன்மானமாக வழங்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. (ஒ-160)

**இமையாணனில் பழைமையான செப்பு நாணயங்கள் கண்டுபிடிப்பு**

பத்திரிகைச் செய்தி

வடமராட்சி, மே 28

*“உடுப்பிட்டி இமையாணனில் பண்டைக்காலத்து செப்பு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை இமையாணனில் நிர்மாணவேலை ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிலர் நிலத்தை ஆழமாகத் தோண்டினர். என்ன ஆச்சரியம்! ஆழத்தில் ஒரு மண்கலம். அந்த மண்கலத்தை பத்திரமாக அவர்கள் வெளியே எடுத்தனர். அதனுள் செப்பு நாணயங்கள். அதுவும் ஒன்றா? இரண்டா? முந்நூறு நாணயங்கள். இந்த நாணயங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை கடைசியாக அரசாட்சி செய்த சங்கிலிய மன்னனின் காலத்தில் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம் என ஓர் ஊகம் தெரிவிக்கப்பட்டது. இமையாணன் என்ற இடம் சங்கிலிய மன்னனால் அவனது பிரதம படைத்தளபதியான இமையாணன் என்பவனுக்கு சன்மானமாக வழக்கப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது”*

*இவ்வரலாற்றுத் தகவல்கள் யாவற்றையும் தொகுத்து நோக்குமிடத்து இமையாணன் என்பவன் சங்கிலிய மன்னனின் பிரதம படைத்தளபதியாக விளங்கியவன் என்பதோடு இவ்விடம் அவனுக்கு சன்மானமாக வழங்கப்பட்டுள்ளது என்பதும் யாழ்ப்பாண வரலாற்றிலே இமையாணனிற்கும் ஓர் இடம் உண்டு என்பதும் உறுதியாகின்றது.*

*இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இமையாணன் மண் கல்வி, சமயம், பண்பாடு, விளையாட்டு, கலை, தொழில் என்ற ரீதியில் தனக்கான தனித்துவத்தோடு மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.*

**கல்வி**

*இமையாணன் மண் நீண்ட கால கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டது. காலத்துக்குக் காலம் கல்வியில் சாதனைகள் புரியும் பலரை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. அக் கல்விப் பாரம்பரியத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக இமையாணன் அரசினர்*

*தமிழ்க்கலவன் வித்தியாலயம் தனது காத்திரமான பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கின்றது. அது போல பாலர் கல்வியை இமையாணன் கலைமகள் முன்பள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றது. மண்ணிலிருந்து ஆசிரியர்கள், அதிபர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள், வங்கி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தனியார் துறை உத்தியோகத்தர்கள் எனப் பல்துறை சார்ந்த ஆளுமைகள் காலத்துக்குக் காலம் உருவாகிக் கொண்டே இருக்கின்றார்கள்.*

**சமயம் - பண்பாடு**

*சமயம் மற்றும் பண்பாட்டு நெறிமுறைகளை பாரம்பரியமாகப் பின்பற்றி வருகின்ற மக்களே மண்ணில் நீண்ட காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இமையாணன் என்னும் பெரும்பிரிவில் இருக்கின்ற உப பிரிவுகள் தோறும் பல ஆலயங்கள் மக்களால் காலங்காலமாக ஆராதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக ஆண்டுதோறும் ஆகம நெறிமுறைகளுக்கு உட்பட்ட மகோற்சவ நிகழ்வுகள் தவறாது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அதே வேளையில் பண்டிகைக் காலங்கள் மற்றும் விரத காலங்களில் சிறப்பு வழிபாடுகள் பண்பாடு மாறாத வகையில் மேற்கொள்ளப்படுவது நோக்கத்தக்கது. குறிப்பாக தைப்பொங்கல் காலங்களில் ஊரே ஒன்று கூடி வயல் வெளிகளிலும் மைதானங்களிலும் போட்டிக்குப் பட்டங்களை ஏற்றும் பண்பாட்டு மரபு இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. மேலும் பாரம்பரிய விளையாட்டுக்களை அழிவுறாது காக்கும் பொருட்டாக வருடா வருடம் பண்டிகைக் காலங்களில் பலவிதமான போட்டி நிகழ்வுகள் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு வலுச் சேர்க்கும் விதத்தில் சனசமூக நிலையங்களும் விளையாட்டுக் கழகங்களும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.*

*மேலும் இமையாணனின் பல இடங்களிலும் தொன்மைமிகு பண்பாட்டு எச்சங்கள் இருந்து காலவோட்டத்தில் மறைந்து போய் விட்டன.*



(இமையாணன் கேணியடியில் ஒரு காலகட்டத்தில் அமையப் பெற்றிருந்த ஆவுரஞ்சிக்கல் - தற்போது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் உள்ளது.)

மாடுகள் தமது உடல் எரிச்சலைப் போக்குவதற்கு ஏதுவாக நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பே ஆவுரஞ்சிக் கல்.

பொதுவாக கேணிகள், கிணறுகள் போன்ற நீர்நிலைகளுக்கு அருகில் இத்தகைய அமைப்புகள் உருவாக்கப்பட்டன. நீர்நிலைகள் இல்லாதபோது இத்துடன் இணைந்த வகையில் தண்ணீர்த் தொட்டி ஒன்றும் கட்டப்பட்டிருக்கும்.

இத்தகைய தொன்மையான ஆவுரஞ்சிக்கல் ஒன்று இமையாணன் கேணியடி எனும் பகுதியில் நீண்டகாலமாக இருந்தது.

*நமது மரபுரிமைகளைப் பேணும் பொருட்டாக அக்கல் 2004-2005 காலப்பகுதியில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வரலாற்றுத் துறை யினரிடம் திரு விஸ்வலிங்கம் மணிமாறன்(தொல்லியல்த் திணைக்கள அதிகாரி) அவர்களால் கையளிக்கப்பட்டது. இவ்இடத்தில் நோக்க வேண்டிய இன்னொரு வரலாற்றுக் குறிப்பு கேணியடி எனும் பெயரின் உருவாக்கம் தொடர்பானது.*

*இவ் ஆவுரஞ்சிக்கல் அமையப் பெற்றிருந்த இடத்துக்கு அண்மித்ததாக கேணியொன்று இருந்து காலவோட்டத்தில் இல்லாது போய்விடவே அவ்விடமே கேணியடி எனும் இடப் பெயராக பதிவாகிவிட்டது.*

*இவ்விடத்தில்,*

*"மக்கள் தம்மை வாழ வைத்த நிலத்தாயின் இயற்கைத் தோற்றங்களை என்றும் மறந்தாரில்லை. எனவே தான் ஊர்ப்பெயர் களில் அவை நிலையான இடத்தைப் பெறும் வகையில் பெயர்களை இட்டு தம் நன்றியுணர்வை வெளிக்காட்டினர்.*

*நீர்நிலைப்பெயர்கள்: குளம், குழி, கேணி, ஆறு, கண்டி, வில் போன்றவை" எனும் கதிர் தணிகாசலம் அவர்களின் கூற்றுகள் நோக்கத்தக்கன. (தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும், கதிர் தணிகாசலம் பக்.185))*

**விளையாட்டு**

*இமையாணன் என்னும் நாமத்தை எங்கும் நிலைநிறுத்தியதில் விளையாட்டும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் தட கள மற்றும் பெருவிளையாட்டுப் போட்டிகளில் சாதனைகளை நிலை நாட்டிய பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பெருமை இமையாணன் மண்ணுக்குரியது. கரப்பந்தாட்டத்தில் தனி முத்திரை பதித்த பல வீரர்கள் மண்ணி லிருந்து உருவாகியிருக்கின்றார்கள். அது போல உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற துறைகளிலும் நீண்ட காலமாக வீரர்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். விளையாட்டு வீரர்களுக்கு களங்களாக இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானமும் அமையப் பெற்றுள்ளன. இவற்றுக்குப் பக்கபலாக இமையாணன் கலைமகள் சனசமூக நிலையம், இமையாணன் அறிவாலயம் சனசமூக நிலையம், வல்லியாவத்தை திருமகள் சனசமூக நிலையம், அந்திரான்*

*சந்திரோதயம் சனசமூக நிலையம் என்பன இருந்து கொண்டிருக் கின்றன. இத்துறைசார்ந்த ஆசிரியர்கள், நடுவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் காலந்தோறும் மண்ணிலிருந்து உருவாகிக் கொண்டேயிருக்கின்றார்கள்.*

கலை

*கலைத்துறையில் நெடிய வரலாற்றை இமையாணன் மண் கொண்டிருக்கின்றது. மண்ணிலிருந்து பல அண்ணாவிமார்களும், கூத்துக் கலைஞர்களும், வாத்தியக்கலைஞர்களும், பாடகர்களும் உரு வாகியிருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சி இன்றுவரை செல்வாக்குப் பெற்றே காணப்படுகின்றது. இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் எனும் அனைத்துக் கலைகளிலும் தடம் பதிக்கும் எழுத்தாளர் களையும் கலைஞர்களையும் காலத்துக்காலம் மண் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றது.*

தொழில்

*அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்புரிவோரை தாண்டி இமையாணன் மண்ணிலே மேலும் பல தொழில் துறைகள் ஆரோக்கியமாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. விவசாயத்தை வினைத்திறனுடன் மேற்கொள்ளும் பல விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அத்தோடு கட்டட ஒப்பந்தம், மரவேலை, கட்டடவேலை, வியாபாரம், சுயதொழில் என்னும் பல்நிலைப்பட்ட தொழில்களை மேற்கொள்ளும் நபர்களையும் இமையாணன் மண்ணில் காலந்தோறும் காண முடிகின்றது*

# யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் வரலாற்றை நினைவுபடுத்தும் சின்னங்கள்



சங்கிலியன் சிலை




அரண்மனை வாயில்





மந்திரி மனை





யமுனா ஏரி







## இமையாணன் வரலாறு கூறும் நூல்கள்



இந்நூலாசிரியர், யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன் சங்கிலியனின் படைத்தளபதிகளில் ஒருவனான இமையாண மாதாக்கன் பெயரை நினைவுபடுத்தி தோன்றியதே இமையாணன் என்ற பெயர் கொண்ட கிராமம் என்ற முடிவுக்கு வருகின்றார். இதற்கு ஆதாரமாக வாய்மொழி வரலாற்றுக் கதைகள், முன்னைய அறிஞர்களின் கருத்துக்கள், இமையாணனை மையப்படுத்தி எழுந்த நாடகங்கள், தனது தொல்லியற் கண்டுபிடிப்புகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும் இக்கிராமத்திற்கு தொன்மையான வரலாறு இருந்ததற்கு அக்கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள், பண்டைய கால சிறு நகரங்கள் இருந்த இடத்தை அடையாளப்படுத்தும் ஆவுரஞ்சிக்கல், சிறு கேணி என்பவற்றின் அழிபாடுகளையும் பயன்படுத்தியிருப்பது இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகும். இவ்வரலாற்றுப் பின்புலத்தில் இருந்து எழுந்ததே பிற்கால இமையாணன் கிராமத்து கல்வி, கலை, சமயம், பண்பாடு என்ற நூலாசிரியரின் விவாதமும் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

– பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்

978-955-54651-3-7
978-955-54651-3-7